# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 29.04.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய சில புத்தகங்களில், மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற தனது வாதத்தை வெளியிட்டுள்ளார்கள். மேலும் அவர்கள் கூறுகையில், உண்மையைத் தேட விரும்பும் உலமாக்கள், நன்னெறியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் குஃப்ர் ஃபத்வா கொடுப்பதும், பொதுமக்களும் சிந்திக்காமல் உலமாக்களின் பின்னால் செல்வதற்கும் பதிலாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும் என்று கவனமூட்டியுள்ளார்கள். ஆனால், நிபந்தனை என்னவென்றால் கலப்பற்ற உள்ளத்துடன் அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். கண்டிப்பாக அல்லாஹ் வழிகாட்டுவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய ஒரு புத்தகமான நிஷானே ஆஸ்மானியில் இதற்கான வழியினையும் கூறியிருக்கிறார்கள். கலப்பற்ற முறையில் தவ்பா செய்து இரவில் இரண்டு ரக்அத் தொழ வேண்டும். முதல் ரக்அத்தில் சூரா யாஸீன் ஓத வேண்டும். இரண்டாவது ரக்அத்தில் 21 முறை சூரா இக்லாஸ் ஓத வேண்டும். இதற்குப் பிறகு 300 முறை ஸலவாத்தும், 300 முறை இஸ்திக்ஃபாரும் செய்து விட்டு, நீ மறைவானவற்றை அறியக்கூடியவனாவாய்; இந்த மனிதனைப் பற்றிய உண்மையை வெளிப்படுத்துவாயாக என அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். பிறகு மீண்டும் இதனைப் பற்றி தன்னுடைய எண்ணங்களிலிருந்து தூய்மை அடைந்தவாறு இந்த இஸ்திகாராவை செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள். முதலில் கூறப்பட்ட கலப்பற்ற தவ்பாவே மிக கடினமான நிபந்தனையாகும். அதன்படி யாருமே அமல் செய்வதில்லை. குறிப்பாக உலமக்கள் கொஞ்சம் கூட அமல் செய்யவில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உள்ளம் பொறாமையினால் நிரம்பியிருந்தாலும், தீய எண்ணம் மேலோங்கி இருந்தாலும், ஷய்த்தானின் எண்ணங்கள்தான் வரும். மக்களில் சிலர் நாங்கள் அதிகமாக துஆ செய்தோம். ஆனால் எங்களுக்கு எந்தவிதமான உண்மையும் வெளிப்படவில்லையே என்று கூறுவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உள்ளத்தில் பொறாமையும், தப்பெண்ணமும், தீய எண்ணமும் நிரம்பியிருந்தால் ஷய்த்தான்தான் வழிகாட்டுவான். இறைவன் வழிகாட்டமாட்டான்.

இதேபோன்று உலமாக்களுக்கும், நன்னெறியார்களுக்கும் தன்னுடைய புத்தகமான கிதாபுல் பரிய்யாவில் குறிப்பாக அல்லாஹ்விடம் உதவி கேட்குமாறு அறிவுறுத்தினார்கள். ஆனால் கெட்ட எண்ணங்களால் நிரம்பியுள்ள உலமாக்கள் இந்த வழிகாட்டுதலின்படி ஒருபோதும் அமல் செய்வதில்லை. மேலும் பொதுமக்களையும் தன்னுடன் சேர்த்து மூழ்கடிக்கிறார்கள்.

இவ்வாறிருந்தும் பல நல்லியல்புடையவர்கள் இந்த வழியினைக் கையாளுகிறார்கள்; அல்லாஹ்விடம் உதவி கோருகிறார்கள். அல்லாஹ்வும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றான்.

எவ்வாறிருந்த போதிலும் அல்லாஹ் இன்றைய காலகட்டத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்தை நிரூபிப்பதற்காக கவலையுடன் உண்மையைத் தேடக்கூடியவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றான்.

தற்போது நான் அப்படிப்பட்ட மனிதர்களுடைய சில சம்பவங்களைக் கூறுவேன். ஒரு தஃப்ஸீருடைய ரிப்போர்ட்டின் அடிப்படையில் இவர்களுக்கு நமது அரபித்துறை இந்த ரிப்போர்ட்டினை கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதத்தில் M.T.A3 –ல் வரக்கூடிய ஹிபாகுல் முபாஷீரில் ஒரு எகிப்திய நண்பர் அப்து பக்கர் முஹம்மது பக்கர் போன் மூலம் கூறினார்கள்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய வழியின்படி இஸ்திகாரா செய்தேன். மேலும் அந்த துஆவை செய்தேன். அந்த இரவில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் பழைய உறவினர் ஒருவருக்கு என்னுடைய கைவிரலை அசைத்தவாறு மிகவும் உணர்ச்சியுடன் ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். ஆனால், நான் கூறிய அந்த விஷயம் எனக்கு கேட்கவில்லை. கனவிலிருந்து விழித்தேன். பிறகு மறுநாளும் இதனைப் போன்றே துஆ செய்தேன். மேலும் அதனுடன் உள்ளம் தெளிவுபெறக்கூடிய ஏதாவதொன்றை எனக்கு வெளிப்படுத்துவாயாக என்றும் அல்லாஹ்விடம் துஆ செய்தேன்.

பிறகு நான் மீண்டும் அதே காட்சியைக் கண்டேன். அதில் அதே உறவினருக்கு முன்பு நான் நிற்கிறேன். என்னுடைய கைவிரல்களை அசைத்தவாறு மூன்று முறை, இறைவன் மீது ஆணையாக! அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் உண்மையான ஜமாஅத் ஆகும் என்று கூறுகிறேன். இதற்குப் பின்னர் அல்லாஹ் எனக்கு பைஅத் செய்வதற்கான வாய்ப்பை வழங்கினான் என்று கூறினார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஓரிரு நாட்களுக்கு மட்டும் துஆ செய்யக் கூடாது. மாறாக, பொறுமையுடன் 2 முதல் 3 வாரங்கள் துஆ செய்ய வேண்டும். அல்லது அதைவிட அதிகமாக இறைவனிடம் நேர்வழியினை வேண்ட வேண்டும். பிறகு அல்லாஹ் ஒரு சமயத்தில் நேர்வழியினைக் காட்டுவான்.

**அடுத்து அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு முபல்லிக் எழுதியுள்ளார்கள்:**

அப்துஸ் ஸலாம் சாஹிப் 25, 30 வருடங்களுக்கு முன்பு பிஜி தீவிலிருந்து அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸிற்கு வந்திருந்தார்கள். அங்கு கிறிஸ்தவச் சூழல் இருந்ததால் கிறித்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் பிறகு ஒரு முஸ்லிமுடைய தப்லீக் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு அவருக்கு நமது முபல்லிக் இனாமுல்லாஹ் கவ்ஸருடன் நட்பு ஏற்பட்டது. மேலும் அவர் நமது பள்ளிவாசலுக்கு வர ஆரம்பித்தார். அவருக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. படிப்பதற்கான நூல்கள் கொடுக்கப்பட்டது. மேலும் அவருக்கு அல்லாஹ்விடம் துஆ செய்து நேர்வழியினைப் பெற ஆலோசனை கூறப்பட்டது. இஸ்திகாரா துஆ செய்வதற்கான வழிமுறையும் அவருக்கு கூறினார்களள. பிறகு அவர் நன்மையை நாடியவாறு இஸ்திகாரா துஆவைச் செய்தார். அவருடைய கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்சியளித்தார்கள்.

அடுத்த நாள் தனது பழைய பழக்கத்தின்படி அஹ்மதி அல்லாதவர்களின் பள்ளிவாசலுக்குச் சென்றார். அங்கு அரபு நாட்டிலிருந்து ஒரு ஷேக் வந்திருந்தார். அந்த ஷேக் வந்திருப்பவர்களிடம் கேள்வி கேட்குமாறு கூறினார். அப்போது அப்துஸ் ஸலாம் சாஹிப் எழுந்து நின்று ''இந்த காலகட்டம் குர்ஆன் ஹதீஸின் அடிப்படையில் இமாம் மஹ்தியின் வருகைக்குரிய காலகட்டமாகும். நான், இறைவா! இமாம் மஹ்தி வந்து விட்டார்களா? வந்து விட்டார்கள் என்றால் அவர் யார்? என்று எனக்கு காட்டுவாயாக என்று துஆ செய்தேன். எனது கனவில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் வந்தார்கள்'' என்று கூறினேன். அதற்கு அந்த ஷேக் இது ஷய்த்தானுடைய கனவாகும். இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. நீர் அதிகமாக தாவூது (அவூதுபில்லாஹி...) கூறுங்கள். அதிகமாக ஸலவாத்தை ஓதுங்கள் என்று கூறினார். பிறகு அவர் துஆ செய்தார். அதிகமாக ஸலவாத்தை ஓதினார். பிறகு கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். அதன் பின்னர் மீண்டும் ஷேக் உடைய கேள்வி பதில் நிகழ்ச்சியில் கலந்த கொண்டு திரும்பவும் இதனைப் பற்றி கூறினார். அந்த ஷேக் மீண்டும் இது ஷய்த்தானின் கனவு என்று கூறினார். அதற்கு அப்துஸ்ஸலாம் சாஹிப் கூறினார். இது வியப்பிற்குரிய விஷயமாக இருக்கிறது. நான் இரவில்

அதிகமாக தாவூது (அவூதுபில்லாஹி...) ஓதினேன். ஸலவாத்தை அதிகமாக ஓதினேன். பிறகு இறைவா! இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகையைப் பற்றி எனக்கு காட்டுவாயாக என்று துஆ செய்தேன். ஆனால் உங்களது கூற்றின்படி எனக்கு இறைவன் பதில் கூறவில்லை. ஆனால் ஷய்த்தான் தான் பதில் கூறுகின்றான் என்று கூறுகின்றீர்கள். இது மிகவும் வியப்பாக உள்ளது. இதனைக் கேட்டதும் பள்ளிவாசலில் கூச்சல் ஏற்பட்டது. இவர் காஃபிர், இவர் கெட்டவர், இவரை வெளியேற்றுங்கள் என்று கூறப்பட்டது. எந்த அளவுக்கென்றால் திரைக்குப் பின்னால் அமர்ந்திருந்த பெண்களும் கூச்சலிட்டவாறு இவர் காஃபிர்; இவரை வெளியேற்றுங்கள் என்று திரையை உலுக்கியவாறு சப்தமிட்டனர். பிறகு அவர் அங்கிருந்து வெளியே வந்தார். பிறகு நடந்த சம்பவங்களை நமது முபல்லிக் சாஹிபிடம் கூறினார். மேலும் இப்போது உள்ளம் தெளிவாகி விட்டது. ஏனென்றால் இந்த ஷேக்கிடம் எவ்வித பதிலும் இல்லை. நான் இப்போது பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்றார். பிறகு அவர் பைஅத் செய்தார். அவர் பைஅத் செய்த அதே நாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கனவில் முழுமையாக வெளிப்பட்டார்கள். அவருக்கு ஸலாம் கூறினார்கள். முஸாபா செய்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதற்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

அடுத்த நாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் முஸாபா செய்ததை நினைத்து மகிழ்ச்சியடைந்தேன். இவர்கள் கடந்த 120 வருடங்களில் பெயர் தாங்கிய ஷேக் ஆகவும், உலமாக்களாகவும் இருக்கின்றார்கள். இதேபோன்றே பொதுமக்களையும் முஸ்லிம்களையும் தூண்டி விடுகின்றனர். இன்றும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வார்த்தைகள் மிகக் கண்ணியமாக நிறைவேறுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நானும் பார்க்கின்றேன். நீங்களும் பார்க்கின்றீர்கள். காஃபிர் என்று கூறக் கூடியவர்கள் இன்று இல்லை. ஆனால், இறைவன் என்னை உயிருடன் வைத்திருக்கின்றான். என்னுடைய ஜமாஅத்தை பெரிதாக ஆக்கியிருக்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. ஆனால் ஜமாஅத் வளர்ச்சி அடைவது, கனவில் வந்து தன்னுடைய உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவது போன்ற இதுவே உயிருடன் இருப்பதற்கான சான்றாகும்.

**பிறகு இந்தோனேஷியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஷான் ஜீர் ஜமாஅத்தின் மேற்கு ஜாவாவுடைய உறுப்பினர் தேதி சனாரியா சாஹிப். இவருக்கு 2006 ஆம் ஆண்டு ஜமாஅத்தின் தூதுச் செய்தி தெரிய வந்தது. இவர் ஜமாஅத்தின் நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகமான இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் மிகவும் விருப்பமான புத்தகமாக இருந்தது. இதனைப் படித்த பிறகும் கூட இவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதில் சிறிது தயக்கம் இருந்தது. பிறகு ஒருநாள் அவருக்கு நேர்வழி கிடைக்க அல்லாஹ்விடம் இஸ்திகாரா செய்யுமாறு கூறப்பட்டது. அவர் தொடர்ந்து துஆ செய்து வந்தார். பிப்ரவரி 2008 -ல் அவர் கனவில் தனது நாவினால் ஒரு வார்த்தை தனது மொழியில் கேட்டார். அதன் அர்த்தம் என்னவென்றால், நீ அங்கு செல்வதாக இருந்தால் முதலில் உறுதியாக வேண்டும் என்பதாகும்.

பிறகு ஒரு கனவில் 40 நாட்கள் நோன்பு வைக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. அந்த நோன்பில் 19, 21 இரவுகளில் ஒரு கஷ்ஃப் காட்சி காண்பிக்கப்பட்டது. அதில் வெண்ணிற ஆடை போர்த்திய ஒரு நபர் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என்ற கலிமாவைக் கூறிக் கொண்டிருந்தார். அஹ்மதிய்யத் உண்மையாகும். உமக்கு உண்மையில் லைலத்துல் கத்ர் கிடைக்கப் பெற்றது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி தான் இமாம் மஹ்தியாவார். இந்த கஷ்ஃப் அவருக்கு பலமுறை வந்தது என்று கூறினார். கடைசியில் 2008 -ல் தன்னுடைய மனைவியுடன் சேர்ந்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இதற்கு பிறகு அவருக்கு பல கஷ்டங்களை சந்திக்க நேரிட்டது. இருந்தாலும் பொறுமையுடன் அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டார்.

**கனடாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

Saint Thomas Entaryo -ல் வாழக்கூடிய உள்ளூர்வாசி பில் ராபின்சன் தீவிர கிறிஸ்தவராவார். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்தவத்திலிருந்து விழிப்புணர்வு பெற்றார். பிறகு இறைவனிடம் நேரான வழி கிடைக்க துஆ செய்ய ஆரம்பித்தார். அவர் கூறுகிறார். ஓரிரவு நான், இறைவா நீ இருக்கின்றாய் என்றால் எனக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என அதிகமாக துஆ செய்தேன். விடிந்ததும் தனது இமெயில் பெட்டியைப் பார்த்தால் அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு பிரசுரம் இருந்தது. பில் ராபின்சன் அதை இறை அடையளாம் எனக்கருதி ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டார். பிறகு மார்ச் 2011-ல் பைஅத் செய்தார்.

அவர் முஸ்லிமான பிறகு தன்னுடைய எல்லா பாவங்களும் கழுவப்பட்டதாகவும் ஒரு புதிய மனிதனாக மாறி விட்டேன் என்றும் கூறினார்.

ஆக, நல்லியல்பு கொண்டவர்களுக்கு அதிக அடையாளங்கள் தேவைப்படாது. தன்னுடைய இமெயில் பெட்டியில் கிடந்த ஒரு பிரசுரத்தை இறை உதவியாகக் கருதி அதனைப் படித்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்.

**பிறகு கஸகஸ்தானின் உள்ளூர் முஅல்லிம் குல்பாத் துகம்போ சாஹிப் எழுதுகிறார்கள்:**

குல்ஸீசம் ஆயிமா கீனா சாஹிபா 2010 -ல் பைஅத் செய்தார்கள். இதற்கு முன்பு சூஃபியிஸத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முதல் கேள்வி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றியதாகத்தான் இருந்தது. அவர் ஈஸா (அலை) மற்றும் இமாம் மஹ்தியைப் பற்றி நம்மிடம் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். அவர் ஜமாஅத்தில் இணைவதற்கு 3, 4 மாதங்களுக்கு முன்பு ஒரு கனவு கண்டார். அதில் கரும்பலகையில் யாரோ ஏதோ எழுதியிருக்கிறார்கள். அதனை அவரால் படிக்க முடியவில்லை. ஆனால் அதன் பொருள் இமாம் மஹ்தி உங்கள் மத்தியில் இருக்கிறார் என கூறப்பட்டது. ஏறக்குறைய இதற்கு இரண்டு வாரத்திற்குப் பிறகு ஜெர்மனி ஜல்ஸாவில் (M.T.A.-ல்) நான் உரையாற்றும் போது என்னை பார்த்திருக்கிறார். இதன் மூலம் அவருக்கு நல்ல தாக்கம் மனதில் ஏற்பட்டது. மேலும் அவர், இமாம் மஹ்தி வந்து விட்டார். அவருடைய பேச்சு பேசப்படுகிறது என அவருக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டது என கூறினார். பிறகு ஜமாஅத்தில் இணைந்தார்.

**சிரோலியோனின் மிஷனரி இன்சார்ஜ் எழுதுகிறார்:**

கேனோமா மாவட்டத்தின் பன்டோமா கிராமத்தில் டாக்டர் தாமு சாஹிபுடன் மிஷனரி சாலிஹ் லிபாயோ சாஹிப், முஅல்லிம் முஸ்தஃபா துபானா சாஹிப் ஆகிய மூவரும் தப்லீகிற்காக சென்றார்கள். தப்லீக் செய்த பிறகு நேர்வழி கிடைப்பதற்கு அல்லாஹ்வின் இஸ்திகாரா செய்வதற்கான முறையும் அல்ஹாஜ் முஸ்தஃபா தாமு சாஹிபிற்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் மூலமாக நீங்கள் அஹ்மதிய்யத்தின் உண்மையை தெரிந்து கொள்ளலாம் எனக் கூறப்பட்டது. மறுநாள் அஹ்மதியாகாத அல்ஹாஜ் முஸ்தஃபா தாமு சாஹிப் பள்ளிவாசலில் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு இறைவன் மீது ஆணையிட்டு, அவர் மீது இறைவன் உண்மையை வெளிப்படுத்தினான் என்று சாட்சி அளித்தார்கள்.

பாருங்கள். அல்லாஹ் ஒருவருக்கு நேர்வழி காட்ட விரும்பினால் சின்னச்சின்ன பொருள்கள் மூலமாக கூட நேர்வழியினைக் காட்டி விடுகிறான். இதனை புரியக்கூடியவர்கள் புரிந்து கொள்வார்கள். ஆனால் அறிவாளிகள் என கருதக் கூடியவர்கள் இவற்றைப் புரிவதில்லை. அவர் கூறுகிறார்: இரவில் கனவில் சைக்கிளில் நகரம் செல்ல விரும்புகிறேன். இவரிடம் அதிக எடையுள்ள பொருள் உள்ளது. இந்த அதிக எடையுள்ள பொருளை எவ்வாறு நகரம் கொண்டு செல்வது என்பதை சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு பையன் வந்து எங்களுடைய முஅல்லிமாகிய உங்களது சகோதரன் சாலிஹ் உங்களை அழைக்கிறார். நீங்கள் என்னுடன் வண்டியில் வாருங்கள் என்று கூறினான். நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். அஹ்மதியாகிய என்னுடைய சகோதரன் அழகிய தலைப்பாகை அணிந்திருந்தான். மேலும் காரில் போவோம் என்று கூறினான். உடனே அவர் என்னுடைய கஷ்டத்திற்குரிய தீர்வு அஹ்மதிய்யத்தில் தான் இருக்கிறது

என்பதை அவர் உடனே தெரிந்து கொண்டார். மேலும் உண்மையான கண்ணியம் இதில் உள்ளது என்பதையும் புரிந்து கொண்டார். இந்த கனவைக் கூறிய பிறகு பைஅத் செய்தார்.

**சிரியா நாட்டிலிருந்து நமது நண்பர் யாஸர் ஃபுர்கான் சாஹிப் கூறுகிறார்:**

நான் எனது உறவினர் ரத்தீபுல் ஹரிரி சாஹிபிடமிருந்து ஜமாஅத்தைப் பற்றி கேள்விப்பட்டேன். கேட்டதும் உள்ளத்தில் உண்மை நிலைபெற்று விட்டது. பைஅத் செய்வதற்கு சம்மதித்தேன். இரண்டு தினங்களுக்கு முன்பு இரண்டு ரக்அத் நஃபில் தொழுதேன். இறைவா எனக்கு உண்மையை வெளிப்படுத்திக் காட்டுவாயாக. மேலும் அதனைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பினை வழங்குவாயாக என துஆ செய்தேன்.

அவர் கூறுகிறார்: நான் படிப்பறிவு இல்லாதவன் ஆவேன். நான் கனவில் கண்டேன். யாரோ என்னுடைய கையை இழுத்துக் கொண்டே செல்கிறார். நான் நெடுந்தொலைவு வரை அவருடனே சென்றேன். பிறகு என்னை எங்கு அழைத்துச் செல்கிறீர் எனக் கேட்டேன். சிறிது தூரம் சென்றதும் நீயே தெரிந்து கொள்வாய் என அவர் கூறினார். பிறகு கொளுந்துவிட்டெரியும் நெருப்பையும், பெருமளவு மக்களையும் பார்த்தேன். அதனைப் பார்த்ததும் நான் பயந்தவாறு அவருடைய கையை விட்டு விட்டேன். அந்த நேரத்தில் வானத்திலிருந்து நூர் (ஒளி) இறங்கியது. நான் அதைப் பார்த்ததும் உங்களுடன் நான் வரமாட்டேன். இந்த நூர் – ஒளியைப் பார்த்ததும் அமைதியும், நிம்மதியும் கிடைத்து விட்டது என்று அந்த நபரிடம் கூறினேன். இந்த ரூஃயா மூலமாக உள்ளம் தெளிவு பெற்றது அல்ஹம்துலில்லாஹ். இதற்குப் பின்னர் அவர் பைஅத் செய்தார்.

**உர்தந்துஸ்கியைச் சார்ந்த ஜனாபா ரானா முஹம்மது அல்பாயினா சாஹிபா கூறுகின்றார்கள்:**

எனக்கு ஜமாஅத்தைப் பற்றிய விஷயம் எனது கணவர் மூலமாக கிடைத்தது. அவர் மூன்று வருடங்கள் M.T.A. பார்த்த பிறகு சில மாதங்களுக்கு முன்பு பைஅத் செய்தார். எனது கணவர் பைஅத் செய்த பிறகு அவரிடம் இறைநெருக்கத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை பார்க்க முடிந்தது. மேலும் துஆ செய்யும் விததத்திலும், அழுகை, மன்றாடல் போன்றவற்றில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர் என்னிடமும் ஜமாஅத்தின் விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டேயிருப்பார். மேலும் இமாம் மஹ்தி (அலை) அவர்களுடைய புத்தகங்களைப் படிப்பதற்கு கவனமூட்டிக் கொண்டேயிருப்பார். குறிப்பாக இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற புத்தகத்தைப் படிப்பதற்காக எனக்கு கொடுத்தார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்குப் பிறகு நான் அரபி புத்தகமாகிய அத்தப்லீக் படித்தேன். அது மிகவும் உன்னதமாக இருந்தது. பிறகு நான் இறைவனிடம் உள்ளம் தெளிவு பெற துஆ செய்தேன். அதன் மூலம் எனக்கு பல கனவுகள் வந்தன. அதில் ஒன்று, நான் கனவில் என்னுடைய கணவர் பல வண்ண ரோஜாப் பூக்களினால் அழகுபடுத்தப்பட்ட உயர்ந்த கல்லின் மீது நிற்கிறார். அவருடன் அதிக அளவில் மக்கள் இருக்கிறார்கள். சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். ஆனால் நான் கீழே நிற்கின்றேன். அவரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். மேலும் அவருடன் சேர்ந்து விட விரும்புகிறேன். பிறகு நான் அவரை நோக்கி ஏறத்தொடங்கினேன். மேலே உள்ள வழி மிகவும் அழகாகவும், ஒவ்வொரு பக்கமும் பச்சைப் பசுமையுடன் கண்ணைப் பறிக்கக்கூடிய பல்வேறு வண்ணம் கொண்ட பூக்களினால் அழகுபடுத்தப் பட்டிருக்கின்றது. நான் மேலே ஏறும் போது களைப்படையும் போதெல்லாம் பல்வேறு பூக்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்ட குடத்திலிருந்து தண்ணீர் குடித்தேன். அது மிகவும் இனிப்பாகவும், சுவையானதாகவும் இருந்தது. இதற்கு முன்பு இதைப்போன்று குடித்ததே இல்லை. இதற்குப் பிறகு எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அனைத்தும் உண்மையான உள்ளம் கவரக்கூடிய இஸ்லாமிய போதனைகள் ஆகும் என நம்பிக்கை வந்தது. பிறகு எனது கணவரிடம் எனது பைஅத் பாரத்தை அனுப்பி விடுங்கள் என்று கூறினேன்.

**பிறகு, அல்ஜெஸாயிர் (தீவைச் சேர்ந்த) பாத்திஹா சாஹிபா கூறுகிறார்கள்:**

நான் M.T.A. –வில் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்த்த பிறகு இறைவனிடம் துஆ செய்தேன். நான் கனவில் இவ்வாறு கண்டேன். நான் மிகப்பெரிய ஜமாஅத்தில் இணைந்துள்ளேன். அதற்கு பாரம்பரிய ஆடையுடன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேலும்

ஒரு திறந்த கதவுடைய பள்ளிவாசலின் பக்கம் வழிகாட்டுகின்றார்கள். அந்த பள்ளிவாசலினுள் நூர் மின்னுகிறது. இந்தக் கனவிற்குப் பிறகு பிப்ரவரி 2010 –ல் பைஅத் பாரம் அனுப்பினேன். பிறகு மிகவும் ஆவலுடன் பதிலுக்காக காத்திருந்தேன். அதே நாளில் இரவில் நான் ஒரு கனவு கண்டேன். நான் ஃபிரேம் செய்யப்பட்ட கண்ணாடியில் பார்க்கிறேன். திடீரென்று என்னுடைய முகம் அந்த ஃபிரேமில் தெரிகிறது. அந்த முகம் மிகவும் பிரகாசத்துடன் தென்பட்டது. என்னுடைய வாழ்நாள் முழுவதும் இதுபோன்ற அழகான முகத்தை பார்த்ததேயில்லை. திடீரென்று அந்த முகம் மறைந்து விட்டது. பிறகு கண்ணாடியில் என்னுடைய குழந்தைப் பருவ முகம் மிகவும் அழகுடனும் பிரகாசத்துடனும் வெளிப்பட்டது. அதைப் பார்த்ததும் நான் கனவில் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். திடீரென்று நான் எனது இடதுபுறம் பார்த்தேன். என்னுடைய ஒரு உதவியாளர் தென்பட்டார். அவர் அஹ்மதிய்யத்தின் தாக்கம் என்மீது எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதைப் பாருங்கள் என்றார்.

**ஜெஸாயிர் (தீவைச் சார்ந்த) முஹம்மது யஹ்யா சாஹிப் எழுதுகின்றார்கள்:**

எனக்கு சில மாதங்களுக்கு முன்பு பைஅத் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. இதற்கு காரணம் எனது மகன் சலீம் ஆவார். பல்வேறு சேனல்களைப் பார்ப்பது அவனது விருப்பமாகும். அவ்வாறு தேடும் போது M.T.A. கிடைத்தது. அதில் ஹிவாரியுல் முபாஷிர் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர் பல நிகழ்ச்சிகளைப் பார்த்தார். மேலும் நிகழ்ச்சியின் இடையே போனும் செய்துள்ளார். அரபி இணையதளத்திலுள்ள ஆதாரங்களையும் படித்துள்ளார். அவருக்கு ஷரீஅத்திற்கு மாற்றமான எந்த விஷயமும் அதில் தென்படவில்லை. தெளிவான ஆதாரங்களைக் கேட்டதும் பைஅத் செய்து விட்டார். ஆனால் நான் பைஅத் செய்வதற்கு முன்பு இஸ்திகாரா செய்தேன். மேலும் இறைவனிடம் ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்தை வெளிப்படுத்த வேண்டினேன். கனவில் சில மனிதர்களை அவர்களுடைய வீட்டில் பார்த்தேன். அவர்கள் கொடூரமான சூராவளியில் தள்ளாடுகின்றனர். தன்னுடைய வீட்டில் வெளியிலுள்ள திண்ணையை மறைக்கக்கூடிய திரையைப் பிடிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களால் அதனைப் பிடிக்க முடியவில்லை. திரை காற்றில் மேலெழும்புகிறது. அவர்கள் மறைவில்லாமல் ஆகிவிடுகின்றனர். வீட்டிலுள்ள பொருள்கள் வெளியே தெரிய வருகிறது. இதற்குப் பிறகு உண்மையில் மிகப்பெரிய நிலநடுக்கம் வந்ததைப் போன்று நான் உணர்ந்தேன். அப்போது மனம் தளராமல் உரத்த குரலில் கலிமா ஷஹாதத் ஓதிதேன். மூன்று முறை உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஓதினேன். பாங்கு சொல்பவரின் பாங்கு சத்தம் கேட்டது. இவை அனைத்தும் ஃப்ஜ்ருக்கு முன்பாக நடந்தது. நான் விழித்த போது, என்னுடைய கண்கள் இறை பயத்தினால் ஈரமாக இருந்தன. பிறகு தொழுகைக்காக எழுந்தேன். பிறகு என்னுடைய பயம் குறைந்தது. உள்ளம் நிம்மதி அடைந்தது.

இந்த கனவின் மூலம் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் உண்மைத்தன்மை என்மீது வெளிப்பட்டது. ஏனென்றால் தாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமையாக மக்களை இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகத்தான் வந்திருக்கின்றார்கள் என்று அவர் கூறுகிறார்.

**தாஹிர் ஹானி சாஹிப் எழுதுகிறார்கள்:**

சில காலத்திற்கு முன்பு லெபனானிலிருந்து ஒரு நண்பர் ஜமீல் சாஹிப் பைஅத் செய்தார். அவர் தனது சகோதரி யாஸ்மீனுக்கு தப்லீக் செய்ய ஆரம்பித்தார். ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று அவள், தனது கனவின் அடிப்படையில் பைஅத் செய்ய முடிவு செய்திருப்பதாக தனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெண்மணி எழுதுகிறார்:

சனிக்கிழமை அஸர் தொழுகைக்குப் பிறகு நேர்வழி கிடைப்பதற்காக அதிகமாக அல்லாஹ்விடம் துஆ செய்தேன். உறங்குவதற்கு முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துக் கொண்டிருந்தேன். பைஅத் செய்யவில்லை என்றாலும் புத்தகம் படிக்காமல் இருக்கின்ற அளவுக்கு எதிரி கிடையாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சீரத்துகளைப் படித்துக் கொண்டிந்த போதே

உறக்கம் வந்து விட்டது. கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சில மனிதர்களுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கின்றார்கள். பிறகு ஹுஸுர்... பைஅத் செய்ய விரும்புகிறீர்களா? எனக் கேட்டார்கள். உங்களது விஷயங்கள் உண்மையானவையும், அறிவுப்பூர்வமானதுமாகும். எனவே பைஅத் செய்ய விரும்புகின்றேன். இதற்குப் பிறகு கனவிலேயே பைஅத் செய்து விட்டார். விழித்த பிறகு கனவின் உண்மைநிலையை விட மிகத் தெளிவானதாக இருந்தது என உணர்ந்தார்கள்.

**எமன் நாட்டைச் சேர்ந்த மஹ்மூது யஹ்யா அலி சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்தை அறிய இஸ்திகாரா தொழுதேன். கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைக் கண்டேன். தாங்கள் கஅபத்துல்லாஹ்வின் வாசலில் ஒரு வெண்ணிற கிளைகளைக் கொண்ட மரத்தின் அருகில் இருக்கிறீர்கள். அதன் உயரம் 2 மீட்டராகும். தாங்கள் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இதற்குப் பின்பு கண் விழித்தேன். ஆனால் கனவின் வார்த்தை ஞாபகம் வரவில்லை. அவர் கூறுகிறார்: சில தினங்களுக்குப் பிறகு மீண்டும் நான் கனவு கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மெம்பரில் நின்று உரையாற்றுகிறார்கள். பிறகு கண் விழித்தேன். பிறகு மக்களுக்கு ஜமாஅத்தின் கொள்கைகளைப் பற்றி எடுத்துக் கூறி தப்லீக் செய்த போது மக்கள் ஏளனம் செய்தனர். மக்கள் இவரை மூளைக்கோளாறு உள்ளவன் என்று கூற ஆரம்பித்து விட்டனர். சிலர் தீய வார்த்தைகளைக் கூறினர். சிலர் பேசுவதையே தவிர்த்தனர். ஆனால் இறை ஜமாஅத்துடன் மக்கள் இவ்வாறு நடந்து கொள்வது வழக்கமானதே ஆகும். இதனைப் பற்றி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. இருந்தாலும் நான் எனது குடும்பத்துடன் பைஅத் செய்தேன்.

**ஜனாப் மக்பூல் காயில் அஹ்மத் சாஹிப் யமன் நாட்டிலிருந்து எழுதுகிறார்கள்:**

இரண்டு வருடங்களாக M.T.A. பார்க்கின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர வேறு யாரும் தர முடியாத கேள்விக்கான பதில் கிடைத்து விட்டது. முதல் முறையாக M.T.A.வில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் படத்தைப் பார்த்தவுடன், இந்த மனிதர் பொய்யராக இருக்கமாட்டார் என உள்ளம் திருப்தி அடைந்தது. பல நற்செய்திகளைக் கொண்ட கனவுகள் கண்டுள்ளேன்.

அந்த கனவின் சிலவற்றை அவர் கூறுகிறார்: ஒருமுறை நான் கனவில் கண்டேன். இஸ்ராயீல் என்னிடம் உனது வயது முடிவடைந்து விட்டது என்று கூறுகிறார். பிறகு அழகான ஓரிடத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு அரேபியரல்லாதவர்கள் வெண்ணிற ஆடை அணிந்து தலையுறை அணிந்துள்ளனர். பிறகு இஸ்ராயீல் எனது நெற்றியில் கை வைத்தவாறு பிஸ்மில்லாஹ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதினார்கள். அதற்குப் பிறகு மயக்கமடைந்த நிலையைப் போன்று ஆகிவிட்டது. இதன் பிறகு கண் விழித்தேன்.

இந்த கனவின் விளக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு கொண்ட பிறகு ஒரு தூய்மையான வாழ்க்கையின் பக்கம் எனது பயணம் ஆரம்பமாகிறது என்பதாகும்.

ஒருமுறை மஸீஹ் தஜ்ஜாலைப் பார்த்தேன். இந்தக் கனவின் விளக்கம் எனது உள்ளத்தில் தோன்றியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்ட பிறகு யாரும் எனக்கும் எனது ஈமானுக்கும் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. சில காலத்திற்கு பிறகு கனவில் ஹஸ்ரத் மஸீஹ் இப்னு மர்யம் முகம் திருப்பிக் கொண்டு செல்வதைப் பார்த்தேன். அதன் விளக்கம் எனக்கு மஸீஹ் நாஸிரி கொள்கை தற்போது முடிவுக்கு வந்தது என புரிந்தது. இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டேன். அவர்கள் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் அவர்களின் ஒளிமிகுந்த முகத்தைப் பார்க்கின்றோம். அவர்களின் நிறம் முத்துக்களைப் போன்று இருந்தது.

ஒருமுறை மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை கனவில் கண்டேன். அவர்களைச் சந்தித்ததும் அவர்களின் கையைப் பிடித்து முத்தமிட்டவாறு அழ ஆரம்பித்து விட்டேன். அவர்கள்

கருணையுடன் கூறினார்கள். வாருங்கள் தொழலாம் எனக் கூறினார்கள். பிறகு நாங்கள் தொழுதோம். இதற்குப் பிறகு இவர் பைஅத் செய்தார்.

**நைஜீரியாவிலிருந்து நமது முபல்லிக் நதீம் சாஹிப் எழுதுகிறார்கள்:**

பெனுவாஸடேட்டைச் சேர்ந்த இமாம் காலித் ஸுஜப் சாஹிபிற்கு நமது ஒரு முஅல்லிமுடன் தொடர்பு ஏற்பட்டது. அவருக்கு ஜமாஅத் பிரசுரங்கள் படிப்பதற்காக கொடுக்கப்பட்டது. அவருக்கு ஆர்வமும் உண்டானது. ஜமாஅத்தின் தலைமையகமான அபுஜாலிலுள்ள முபல்லிக் உடன் அதிக அளவில் கேள்வி பதில் நிகழ்ச்சி நடந்தது. மேலும் அரபி நூல்களையும் பெற்றுக் கொண்டார். சில தினங்களுக்குப் பிறகு இமாம் சாஹிப் கூறினார்கள். எனக்கு முழு திருப்தியாக இருக்கிறது. மேலும் நான் ஒரு கனவு கூட கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நைஜிரியாவில் மிகப் பெரிய கூட்டத்தில் உரையாற்றுகிறார்கள். நான் ஹாவுஸா மொழியில் இதற்கு மொழியாக்கம் செய்து கொண்டிருக்கிறேன். உரையின் இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு இரண்டு பேனா மற்றும் ஒரு புத்தகம் கொடுத்தார்கள். இதனால் எனக்கு திருப்திகரமாக இருக்கிறது. நான் உள்ளத்தால் அஹ்மதியாகி விட்டேன். அவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் சுயமாகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி ஹாவுஸா மொழியில் ஒரு பிரசுரம் தயாரித்துள்ளார் என்பதையும், அவரது மொழிபெயர்ப்பில் இந்தியாவில் இயேசு என்ற புத்தகம், அல்கவ்லுல் சரிஃபீ ளுகூருல் மஹ்தி வல் மஸீஹ் என்ற புத்தகமும் அடங்கும். மேலும் அந்த கடிதத்தில் நான் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்தான், நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இமாம் மஹ்தி என்பதை ஏற்றுக் கொண்டேன். மேலும் மற்ற உலக மக்களையும் நான் இதன் பக்கம் அழைக்கின்றேன். அவர்களும் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இமாம் சாஹிப் அல் கவ்லுல் சஹிஃபீ ளுகூகுல் மஹ்தி வல் மஸீஹ் உடைய நூலை ஹாவுஸா மொழியில் மொழிபெயர்க்க ஆரம்பித்துள்ளார்கள் என்பதையும் எழுதியுள்ளார்கள். பிறகு சில நாட்களுக்கு முன்பு தான் கனவு கண்டதாகவும், அதில் ஒரு வெண்ணிற மனிதர் வெண்ணிற ஆடையைப் போர்த்தியவாறு என்னிடம் வந்தார். முதலில் நீங்கள் இந்தியாவில் இயேசு என்ற நூலை மொழியாக்கம் செய்யுங்கள். இது எனது புத்தகமாகும். இந்த மொழியாக்கத்தை கோகிஸ்டேட் மக்கள் வரை சென்றடையச் செய்யுங்கள் என்று கூறினார். எனவே, நான் அந்த புத்தகத்தின் மொழியாக்கத்தை ஆரம்பித்தேன். அப்போது அது முடிவு பெறக்கூடிய நிலையில் உள்ளது. எனக்கு பல சீடர்கள் உள்ளனர். இன்ஷா அல்லாஹ் அவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பேன்.

**ஃபுர்கினோபாஸோவிலிருந்து நமது மிஷனரி இன்சார்ஜ் எழுதுகிறார்:**

தனது தப்லீகின் கீழுள்ள ஸேலா அபுபக்கரிடம் கூறினார். நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மையை உணர விரும்புகிறீர்கள் என்றால் நான் உங்களுக்கு ஒரு வழியினைக் கூறுகிறேன். அது, நீங்கள் ஒவ்வொரு நாளும் தவறாமல் 2 ரக்அத் நஃபில் தொழ வேண்டும். அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மையைப் பற்றி மட்டும் கேட்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் உங்களுக்கு நேரான வழியினைக் காண்பிப்பான். அவரும் அதேபோன்றே செய்து வந்தார். ஒருநாள் ஸேலா அபுபக்கர் சாஹிப் கனவு கண்டார். ஒரு மனிதர் வெண்ணிற ஆடையில் வந்தார். அவர் மேலே வா என்று அழைக்கிறார். அந்த வெண்ணிற ஆடை அணிந்த மனிதர் தனக்குமேல் ஒரு ஆசனத்தில் இருப்பது போன்று கண்டார். ஸேலா அபுபக்கர் சாஹிப் கூறுகிறார். கனவில் என்னுடன் எங்கள் கிராமத்தின் இமாமும் உடனிருந்தார். அந்த வெண்ணிற மனிதர் எங்களை மேலே வர அழைத்தார். நான் வேகமாக மேலே ஏறினேன். இமாம் சாஹிப் என்னுடைய கையை விட்டு விட்டு நான் வரமாட்டேன் என்று கூறி விட்டார்.

அவருக்கு புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டதும் அவர் கனவில் வந்தது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் என்பதை உணர்ந்தார். அவர்கள் ஈமான் கொள்வதற்காகத்தான் அழைத்தார்கள். இதன் மூலமாக அவர் பைஅத் செய்தார்.

**சிரியா நாட்டைச் சேர்ந்த மஹ்மூத் ஈஸா சாஹிப் கூறுகின்றார்:**

எனக்கு எனது கஸின் மூலமாக M.T.A.பார்க்க நேர்ந்தது. அவர் மருத்துவர் ஆவார். அவர் பொய்யர்களைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் ஒருநாள் ஒருவர் தன்னை இமாம் மஹ்தி என்று வாதம் புரிகிறார் என்று ஏளனமாகக் கூறினார். இவரைப் பின்பற்றக் கூடியவர்கள் எல்லா இடங்களிலும் உள்ளனர். அவர் இறந்து 100 வருடங்கள் ஆகி விட்டன. நான் M.T.A. வைப் பற்றிய விஷயங்களை கேட்டறிந்தேன். ஆரம்பத்தில் எனக்கு இமாம் மஹ்தி வந்து மரணித்து விட்டார்களே என்ற வருத்தமும் ஆச்சர்யமும் இருந்தது. எனக்கு இதனைப் பற்றி தெரியாமல் போய் விட்டதே. அவருக்காகத் தான் நான் காத்துக் கொண்டிருந்தேன். அவர் வந்துதான் முஸ்லிம் உம்மத்திற்கு சுதந்திரம் பெற்றுத் தருவார் என எண்ணினேன். பிறகு நான் என் உள்ளத்தில் இவர் உம்மத்திற்கு எவ்வாறு சுதந்திரம் பெற்றுத் தருவார். இவரை யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை. நான் கஸினிடம் கூறினேன். ஒருவேளை இவர்கள் உண்மையாளர்களாக இருக்கலாம். அவர் என் பேச்சை கேட்கவில்லை. அவர் எழுதுகிறார். நான் ஒரு நல்ல மனிதர் ஒன்றும் கிடையாது. நான் எந்த மதத்தையும் சேராதவன் ஆவேன். தொழமாட்டேன். மது அருந்துவேன். இருந்தபோதிலும் உண்மை, நீதி, நியாயத்திற்கான தேடுதல் இருந்தது.

நான்கு வருடங்களுக்கு முன்பு நான் கனவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பார்த்தேன். அவர்கள் கூடாரத்தில் அமர்ந்திருந்தார்கள். அருகில் சஹாபாக்கள் அமர்ந்திருந்தார்கள். நான் முன்பு சென்று பார்த்தேன். ஒரு பிரகாசமிக்க ஒரு முகம் தென்பட்டது. நான் அருகில் இருந்த மக்களிடம் இந்த மனிதருக்கு தாடியில்லையே என்று கேட்டேன். அதற்கு மக்கள் கூறினார்கள். வருகைக்கு முன்பு உள்ள முகம் என்று கூறினார்கள். பிறகு கண் விழித்தேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் M.T.A. பார்க்க ஆரம்பித்த பிறகு நான் கனவில் பார்த்த முகம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் முகம் என்பது தெரிய வந்தது. நான் மிகவும் வியப்புடன் எனது மனைவியிடம் கூறினேன். வித்தியாசம் வெறும் தாடி மட்டும் தான். மற்றபடி அனைத்தும் இதே முகம் தான். எனது அமல் சரியில்லாத காரணத்தால் நான் பைஅத் செய்வதில் தாமதம் காட்டினேன். நான் ஜமாஅத்தில் இணைந்து ஜமாஅத்திற்கு கெட்ட பெயர் உண்டாக்க விரும்பவில்லை. இது புதிதாக வரக்கூடிய மக்களுடைய எண்ணங்களாகும். பழையவர்களுக்கு சிந்திக்க வேண்டிய இடமாகும். நான் லெபனானுடைய பத்திரிகையான அஸ்தருதில் எழுதுவேன். கவிதையும் கூறுவேன். குறுங்கவிதைகளை எழுதவும் எண்ணினேன். ஆனால் நான் எப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) வுடைய கவிதைகளைப் படித்தேனோ அதற்கு பிறகு வாழ்க்கை முழுமையாக மாறி விட்டது. அவர்களுடைய கவிதைகள் மிக உன்னதமானதாக இருக்கின்றது.

**கிருகிஸ்தானிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்கள்:**

ஒரு இளைஞன் தேங்திங் சாஹிப் அவர்கள் தன்னுடைய சம்பவத்தை தானே கூறுகிறார்கள். தேங்திங் சாஹிப் கூறுகிறார்கள். நான் சில காலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றிய வி–யங்களை சேகரித்து வந்தேன். ஆனால், இப்போது வரை பைஅத் செய்ய முடிவு செய்யவில்லை. அந்த நேரத்தில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் மேல்தளத்தில் ஒரு கறுப்பு உருவம் தென்படுகிறது. உடனே நான் சூரா ஃபாத்திஹா மற்றும் லாயிலாஹ இல்லல்லாஹ் என ஓத ஆரம்பிக்கின்றேன். கனவில் ஒரு வெள்ளை நிற காகிதம் காட்டப்படுகிறது. அதில் அரபியில் சில வரிகள் எழுதப்பட்டுள்ளது. நான் அதை படிப்பதற்கு முயற்சி செய்கிறேன். ஆனால் எனக்கு அது புரிய முடியவில்லை. உடனே இடதுபுற ஓரத்தில் ரஷ்யன் மொழியில் இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்று எழுதப்பட்டிருந்தது. உரத்த குரலில் அஹ்மதிய்யத் உண்மையான இஸ்லாம் என சத்தம் வந்தது. இந்த கனவு கண்ட பிறகு உள்ளம் திருப்தி அடைந்தது. பிறகு உடனேயே நான் பைஅத் செய்தேன்.

**இந்தோனேஷியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்.**

மேற்கு ஜகார்த்தாவைச் சேர்ந்த ஜனாப் ரோனி சரோனி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர் ஆவார். அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு கனவில் வெண்ணிற ஆடையை அணிந்த ஒரு வித்தியாசமான நண்பரைக் கண்டார். அவர் தலையில் தலைப்பாகை அணிந்திருந்தார். இந்தக் கனவு இவருக்கு மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கு வீட்டில் போட்டோவில் கனவில் காட்டப்பட்ட அதே முகத்தைப் பார்த்தார். இந்த போட்டேவைப் பற்றி விசாரித்தார். அதற்கு அவருடைய நண்பர் இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் ஆவார்கள் என்று கூறினார். இதற்குப் பிறகு ரோனி சாஹிப் ஜமாஅத்தின் நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். அவரது மனைவியின் கூற்று என்னவென்றால், அவர் இரண்டு நாட்களில் டஜன் கணக்கில் ஜமாஅத்தின் புத்தகங்களைப் படித்து விட்டார் என்பதாகும். கடைசியில் 2008 ல் அவர் பைஅத் செய்தார். கடந்த நாட்களில் இந்தோனேஷியாவில் நடந்த மூன்று ஷஹாதத்துகளில் இவரும் ஒருவராவார்.

**பெனினின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

வாஸில் ரீஜண்டாவிலுள்ள ஒரு கிராமமான கோகோவில் உள்ளூர் மிஷனரியாக இருந்த ஹுஸைனி அலி சாஹிப் பலமுறை தப்லீக் செய்வதற்காக சென்றிருக்கிறார்கள். அங்குள்ள இமாம் மவ்லவி அப்துஸ்ஸமது சாஹிப் ஜமாஅத்திற்கு மிகப்பெரிய எதிரியாவார். தப்லீக் பணியில் அதிகமாக இடையூறுகளை ஏற்படுத்துவார். அவருடனும் பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் அவர் எதிர்ப்பில் நிலைத்து நின்றார். முஅல்லிம் அலி சாஹிப் கூறினார்கள். கடந்த எட்டு மாதங்களாக அந்த மவ்லவியுடன் தொடர்பு இல்லாமல் இருந்தது. ஒருநாள் அந்த மவ்லவி காலையில் போன் செய்தார். கிராமத்தில் வந்து சந்திக்கும்படி கூறினார். அவரிடம் சென்ற போது அவர் கூறினார். இரவில் கனவில் உங்களுடைய இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வந்தார்கள். அவர்கள் என்னிடம் எதற்காக தாமதிக்கின்றீர்கள்? ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள் என்று பலமுறை கூறினார்கள். அவர் கூறினார்: உங்களது ஹுஸுர் அவர்களின் கம்பீரத்தினால் என்னால் எதுவும் பதில் கூற முடியவில்லை. இதில் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையானது தான். எனவே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என இறைவன் புறமிருந்து எனக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு மவ்லவி சாஹிப் எதிர்ப்பை வெளிப்படுத்துவதை விட்டு விட்டார். மற்ற நண்பர்களையும் ஜமாஅத்தின் பக்கம் கவனமூட்டுகிறார்கள். அனைவரையும் சேர்த்து நான் ஜமாஅத்தில் இணைவேன் என்று கூறியுள்ளார். இவர் எதிர்ப்பை விட்டதனால் அங்கு பைஅத்துகள் நடைபெற்றன. அந்த மவ்லவி மூலம் 51 நபர்கள் பைஅத் செய்துள்ளனர்.

**இந்தோனேஷியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

அஸிஸா இத்தாஸ் கந்தியான் சாஹிபா பர்வூன் ஜமாஅத்தின் உறுப்பினர் ஆவார். இவள் சிறிய வயதுடைய பெண் ஆவாள். இமாம் மஹ்தி யார் என்று தெரியாமலேயே பலமுறை கனவில் இமாம் மஹ்தியை பார்த்திருக்கிறாள். நக்ஷபந்திகளின் இயக்கத்தில் சேர்ந்திருந்தார். ஆனால் கனவில் கண்ட இமாம் மஹ்தியை கண்டறிவதில் வெற்றி பெற முடியவில்லை. 2007 -ல் மே 7ம் தேதி அன்று அவர்களுடைய அண்டை வீட்டார் விருந்திற்கு அழைத்திருந்தார்கள். இவர் நமது முபல்லிக் ஜபருல்லாஹ் சாஹிப் ஆவார்கள். இத்தாஸ் கந்தியான் இவர்களது வீட்டில் நுழைந்ததும் ஒருவித உணர்வு ஏற்பட்டது. அங்கு M.T.A. இருந்தது. அந்த நேரத்தில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய நிகழ்ச்சி வந்து கொண்டிருந்தது. உடனே இத்தாஸ் நான் கனவில் கண்ட மனிதர் இவர்தான் என கூறினாள். பிறகு மே 24ம் நாள் பைஅத் செய்தார்கள்.

**கிருகிஸ்தானுடைய சலாமார்க் கிஸ்தாபோ சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர் சில வருடங்களுக்கு முன்பு இலண்டனில் பைஅத் செய்தார். தற்போது கிருகிஸ்தான் ஜமாஅத்துடைய சதர் ஆக இருக்கிறார்கள். பைஅத் செய்வதற்கு முன்பு நான் இஸ்லாத்தை விட்டும்

வெளியேறிய நிலையில் இருந்தேன். எனக்கு மார்க்கத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதிருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கு முன்பு நான் ஒரு கனவு கண்டேன். என்னுடைய சிந்தனையில் அது முழுமையாகப் பதிந்து விட்டது. இரவில் அந்த கனவைக் கண்டேன். அதில் என்னுடைய அண்ணன் நூரன் சாஹிப் என்னிடம் கூறினார்: நான் அல்லாஹ்விடமிருந்து தூதராக அனுப்பப்பட்டுள்ளேன். எனவே, நம்பிக்கை கொள் என்றார். நான் நம்பிக்கை கொள்கிறேன் என்றேன். பிறகு அவர் என்னிடம் கூறினார். நீங்கள் அனைவரும் சொர்க்கத்திற்குச் செல்வீர்கள். ஆனால் சொர்க்கத்திற்குச் செல்வதற்கு இறைவழியில் பொருள் தியாகம் செய்வது அவசியமாகும். இத்துடன் அந்த கனவு நிறைவடைகிறது.

ஹுஸூர் கூறுகின்றார்கள்: பிறகு இரண்டு வருடங்களுக்குப் பிறகு இவர் ஜமாஅத்தை ஏற்றுக்கொண்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய அல் வஸிய்யத் புத்தகம் கிருகிஸ்தான் மொழியில் வெளி வந்ததும் அதனைப் படித்து இவர் வஸிய்யத் செய்தார். அவர் இரண்டு வருடத்திற்கு முன்பு கண்ட கனவு நிறைவேறிவிட்டது. அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவத்தை எனக்கு முதலிலேயே அறிவித்து விட்டான். வஸிய்யத் ஒரு இறைத் திட்டமாகும். இதில் இணைவது பரக்கதிற்குரியதாகும்.

**ஜஹாயிரைச் சேர்ந்த அப்துல் காதர் அவர்கள் கூறுகிறார்கள்:**

2004-ல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இரு தோற்றங்களில் - ஒன்று வயது முதிர்ந்த நிலையிலும் மற்றொன்று 45 வயதுடைய நிலையிலும் கனவில் கண்டேன். அப்போது அவர்கள் நீளமான தாடி உடையவர்களாகவும் தலைப்பாகை அணிந்தவர்களாகவும் இருந்தார்கள். பிறகு 2006-ல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இரு தோற்றங்களில் காணும் வாய்ப்பு கிடைத்தது. ஹுஸூர் அவர்களுடைய முகம் வெள்ளை நிறமாகவும் ஒளி நிறைந்ததாவும் இருந்தது. அன்னார் என்னிடம் கூறினார்கள்: மகிழ்ச்சியடைவீராக. இவர் இறைவனுடைய ரஸூல் ஆவார். இதற்கு இரண்டு மாதத்திற்குப் பிறகு கனவில் மற்றொரு தோற்றமாக இருந்த முகம் M.T.A.-வில் தென்பட்டது. அது இமாம் மஹ்தி (அலை) அவர்களாக இருந்ததால் அதன்பிறகு தொடர்ந்து 15, 20 நாட்கள் வீட்டில் அமர்ந்து M.T.A. நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். பிறகு பைஅத் செய்தேன்.

**காங்கோ கிஸ்ஸாஸோ அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

திதிகே கங்காலா சாஹிப் லோகோமாஷி நகரில் வக்கீலாக இருக்கிறார். இவர் கிறித்தவராவார். சில மாதங்களாக நமது தப்லீக்கின் கீழ் இருந்தார். ஆனால் பைஅத் செய்ய மறுத்து வந்தார். ஒரு நாள் அவர் கனவு கண்டார். பலவிதமான கொடூரமான காட்டு விலங்குகள் இவர் மீது தாக்குதல் நடத்துகின்றன. இவர் தயங்காமல் வெறும் அல்லாஹ், அல்லாஹ் என்று கூறியவாறு அவைகளின் மீது தாக்குகிறார். அந்த விலங்குகள் கீழே விழுந்து கொண்டே செல்கின்றன. இந்த கனவும் மிக நீண்டதாக இருந்தது. விடிந்ததும் மிஷன் ஹவுஸ் வந்தார். மிகவும் உணர்வுப்பூர்வமாக தனது கனவை அங்கு வந்த மற்றவர்களிடம் கூறினார். மேலும் இஸ்லாம் உண்மையான மதம் என்றும், ஜமாஅத் உண்மை என்றும் சாட்சி கூறினார். அதே நாளில் பைஅத்தும் செய்தார். உளப்பூர்வமாக ஜமாஅத்தில் இணைந்துள்ளார்.

**எகிப்து நாட்டைச் சேர்ந்த சாமி முஹம்மது இராக்கி சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் ஒரு பிரபல்யமான கிறிஸ்தவ பாதிரி இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்துவதையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து கண்ணியத்திற்கு குறைவான வார்த்தைகளை கேட்கும் போது உள்ளத்தால் அழுவேன். மேலும் என்னை இதற்கு எதிராக பதில் கூற முடியாதவனாய் உணர்ந்தேன். இந்த உணர்வு என்னை உள்ளுக்குள்ளேயே கொன்று கொண்டிருந்தது. ஏனென்றால் நான் எகிப்தில் ஒரு பள்ளிவாசலின் இமாம்

ஆவேன். எனவே இஸ்லாம் சம்பந்தப்பட்ட ஞானம் எனக்கும் இருந்தது. இருந்தாலும் இப்படிப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறுவதிலிருந்து முஸ்லிம் ஏன் தன்னை தாழ்வானவனாகவும் முடியாதவனாகவும் கருதுகிறான் என்பது புரியாமலேயே இருந்தது. இன்டர்நெட்டில் இதனைப் பற்றி ஆராயும் போது பழைய தப்ஸீர்களும் உலமாக்களுடைய வழிமுறைகளும் இந்த பாதிரியுடைய பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூற முடியாது. இப்படிப்பட்டவர்களின் மூலமாகத்தான் பாதிரிகளுக்கு பொய்க் குற்றச்சாட்டுகளை வைப்பதற்கு தைரியம் பிறக்கிறது என்பதை உணர்ந்தேன். பிறகு திடீரென்று முஸ்தஃபா சாபித் சாஹிபுடைய புத்தகம் அஜுபுபா அனில் ஈமான் கிடைத்தது. அவர்களைப் பற்றி மேலும் அதிகம் நொந்து கொள்ள முயற்சிகள் செய்தேன். அப்போது ஜமாஅத்தின் இணையதளம் மற்றும் M.T.A.பற்றி தெரிய வந்தது. பிறகு அதிக அளவு படித்தும், பார்த்தும் வந்ததால் இது தனிப்பட்ட ஒரு மனிதனின் முயற்சியின் விளைவு கிடையாது என்பது தெரிய வந்தது. பிறகு இரண்டு வருடங்களாக ஆராய்ந்தேன். அதன் சுருக்கமாக குர்ஆன் மஜீத் கிடைத்தது. பிறகு கனவில் நான் நாஸிர் ஹானி சாஹிப், தமீம் புதகர் சாஹிப், தாஹிர் நதீம் சாஹிப் ஆகியோர் ஒரு சாப்பாட்டு விரிப்பு அருகில் அமர்ந்திருந்தார்கள். இமாம் மஹ்தி (அலை) அவர்கள் எனது கையைப் பிடித்து அங்கு அழைத்துச் சென்றார்கள். என்னையும் அவர்களுடன் உட்கார வைத்தார்கள். இந்த ருஃயாவிற்குப் பிறகு அல்லாஹ் பைஅத் செய்வதற்கு எனது உள்ளத்தை திறந்து விட்டான்.

ஒரு ரஷ்யப் பெண்மணி ஸப்பியா உல்ஹா 2009ல் பைஅத் செய்தார்கள். அவர்கள் தனது கனவை கூறுகிறார்கள. ரமலானின் கடைசிப் பத்து நாட்களில் கனவு வந்தது. அதன் மூலம் அவர்களது வாழ்வு இரண்டு பிரிவுகளாய் உள்ளது. சதுரங்கத்தைப் போன்று கடினமானதாகும். பிறகு ஒருவர் கூறுவார். மத்தியில் செல்வதற்குள் அனைத்தும் மாறி விடும். பிறகு அடுத்த பகுதியில் சென்றடைந்ததும் தூய்மையான பச்சைப் பசுமையான புற்களை உடைய சமவெளி தோற்றமளிக்கிறது. அதில் பிரகாசமான சூரியன் தென்படுகிறது. எனக்கு இது இந்தியா என்று கூறப்படுகிறது. அங்கு அழிவிற்கு உள்ளான ரோட்டை பார்க்கிறார்கள். இந்த இடம் வரை செல்ல தடுக்கப்படுகிறது. அங்கு செல்வதற்கு ஏதாவது செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது. அதற்குப் பிறகு தான் அங்கு செல்ல முடியும். இந்த கனவிற்கு 4, 5 வாரத்திற்குப் பிறகு ஜமாஅத்துடன் சேராத ஆனால் ஜமாஅத் முபல்லிக்கிடமிருந்து விஷயங்களை கேட்டறிந்து கொண்டிருந்த ஒரு இமாம் நமது சென்டரில் தாஹிர் ஹஸா சாஹிபிடம் அழைத்து வந்தார். அங்கு அந்தப் பெண்மணிக்கு ஜமாஅத் விஷயங்கள் கூறப்பட்டது. அதனைக் கேட்டு அந்தப் பெண்மணி மிகவும் ஆச்சரியப்பட்டாள். இமாம் மஹ்தி இந்தியாவில் வந்திருக்கிறார்கள். எனக்கு கனவில் பிரகாசமான சூரியன் இந்தியாவில் தான் காண்பிக்கப்பட்டது. பிறகு இறையருளால் அவர் பைஅத் செய்தார்.

ஆக பல்வேறு சம்பவங்களிலிருந்து நான் ஒரு சில சம்பவங்களை மட்டும் எடுத்திருந்தேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இப்போது மீண்டும் இஸ்லாத்தின் கண்ணியமும் மேன்மையும் வெளிப்படக்கூடிய நேரம் வந்து விட்டது. எனவே நீங்கள் வானத்திலிருந்து இறங்கக்கூடிய ஒளிகளுக்கும் பரக்கத்துகளுக்கும் அல்லாஹ்விற்கு நன்றி கூறுங்கள். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப தொல்லைகள் வந்த போது அவர்களுக்கு உதவி புரிந்தான். மேலும் அவர்கள் இறைவனுடைய இந்த அருளுக்கு கண்ணியமளிக்கவில்லை என்றால் இறைவன் அவர்களைப் பற்றி பொருட்படுத்தமாட்டான். அவன் தனது வேலையை செய்து முடிப்பான். ஆனால் இவர்கள்தான் வருத்தப்படுவார்கள்.

அல்லாஹ் முஸ்லிம்களின் உள்ளத்தை திறப்பானாக. அவர்கள் உண்மையை கண்டறிவதற்கு தனது இறைவனிடம் உண்மையான முறையில் உதவி கேட்கக் கூடியவர்களாக ஆகட்டுமாக. அல்லாஹ் நமது ஈமானையும் உறுதிப்படுத்திக் கொண்டே செல்வானாக. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

**முதல் ஜனாஸா:** சிரியாவைச் சேர்ந்த நமது நண்பர் அஹ்மது பக்கிரி சாஹிப். மார்ச் 5ம் தேதி புற்றுநோய் காரணமாக மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சிறு

வயதிலிருந்தே பள்ளிவாசலுடன் தொடர்பு கொண்டவராக இருந்தார். தனது நல்லியல்பின் காரணமாக விரைவாகவே உண்மையை கண்டறிந்தார். அஹ்தியல்லாதவர்களின் பள்ளியுடனும் நல்ல பிடிப்பு இருந்தது. அஹ்மதி அல்லாத பள்ளிவாசலின் இமாம்களின் சொல் ஒன்று செயல் வேறாக இருக்கிறது என்பதையும் உணர்ந்திருந்தார். அல்லாஹ் அவரை மவ்லவிகளிடமிருந்து விலக்கினான். மேலும் உலக வாழ்க்கையில் விழாமல் பாதுகாத்தான். மேலும் அவர்களது அறிமுகத்தை ஜமாஅத் அஹ்மதிய்யாவுடன் சேர்த்து உண்டாக்கினான். ஜமாஅத்தைப் பற்றி இவர் இஸ்திகாரா செய்தார்கள். இதுவும் கூட இன்று கூறப்பட்ட விஷயங்களின் தொடர்ச்சியாகவே உள்ளது. கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டார்கள். தாங்கள் மிகவும் பிரபல்யமான பழைய மவ்லவியிடம் போகிறார்கள். அருகில் சென்றதும் அந்த மவ்லவி காணாமல் போய் விடுகின்றார். ஹுஸுர் (அலை) அவர்கள் இவர் பக்கம் திரும்பினார்கள். மேலும் கூறினார்கள். இந்த மவ்லவி தூரமாக்கப்பட்டு விட்டார். இந்த கனவின் மூலம் இவருக்கு உள்ளத்தில் நல்ல தாக்கம் ஏற்பட்டது. 15 ஜுலை 2009 ல் தனது 17 வயதில் பைஅத் செய்தார். புற்று நோயாளியாக இருந்தாலும் கூட தப்லீக் செய்வதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். இவரை முர்தத் ஆக்குவதற்காக வந்த எந்த மவ்லவியும் இவருக்கு முன்பு நிற்க முடியாமல் போனார்கள். இவருக்கு உண்மையான பல நல்ல கனவுகள் வந்துள்ளன.

இன்று சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் நிலையைப் பற்றி ஒரு வருடத்திற்கு முன்பே தனது கனவின் மூலம் தனது நண்பர்களுக்கு கூறியிருந்தார்.

**இரண்டாவது ஜனாஸா:** தாமிர் ரஷீது ராஷித் சாஹிப். ஏப்ரல் 8 ஆம் தேதி 2011 -ல் சிரியாவில் நடைபெற்ற வன்முறையில் ஊர்வலங்களும், அடிதடியும், துப்பாக்கி சூடும் நடந்தது. கட்டிடங்களின் மேலிருந்தும் துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த துப்பாக்கி சூட்டின் போது தாமிர் ரஷீது சாஹிப் ஷஹீதானார்கள்.

இவரைப் பற்றி இவரது சகோதரர் கூறுகிறார். துப்பாக்கிச் சூடு நடக்கும் போது நான் வீட்டிற்கு வெளியே இருந்தேன். எனது சகோதரர் துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டதும் என்னை தேடுவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்தார். கொஞ்ச தூரம் வந்ததும் என்னைப் பார்த்தார்கள். பிறகு வீட்டிற்கு போகும்படி கூறினார்கள். பிறகு அவர் வீட்டிற்குத் திரும்பியதும் ஒரு குண்டு இதயத்தில் பாய்ந்தது. உடனேயே மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு கூறினார்கள். ஏப்ரல் 1 ம் தேதி குறிப்பாக கலவரத்தைப் பற்றி கூறியிருந்த குத்பாவைப் புரிந்து கொண்டேன். ஒருபோதும் கலவரத்தில் ஈடுபடமாட்டோம் என கூறியிருந்தார்கள். இருந்தாலும் சாதாரணமாக வெளியே வந்த போது தோட்டாவிற்கு இறையானார்கள். அன்பு செலுத்தக் கூடியவரும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடியவரும் ஆவார். மனைவியைத் தவிர ஒரு மகனும் 2 மகள்களும் உள்ளனர். மரணத்தின் போது 31 வயதுடையவராக இருந்தார்.

பைஅத்திற்கு முன்பு ஷேக் அப்துல் காதிர் அல்பானியைப் பின்பற்றக்கூடியவராக இருந்தார். இந்த அல்பானி தன்னை இமாம் மஹ்தி என்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் டமாஸ்கஸில் உள்ள இவருடைய பள்ளியில் இறங்குவார் என்பது இவரது வாதமாகும். பிறகு ஈஸா (அலை) அவர்களுடைய வஃபாத்திற்கான ஆதாரங்களைக் கேட்டதும் 2008 -ல் பைஅத் செய்து அஹ்மதி ஆனார்.

**மூன்றாவது ஜனாஸா:** சிரியாவைச் சேர்ந்த முஹம்மது முஸ்தஃபா ராஅத் சாஹிப் ஆவார். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு வீட்டின் மாடியில் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் கீழே கலவரம் நடந்து கொண்டிருந்தது. அவருடைய பையன் மாடியின் ஓரிடத்தில் நின்றவாறு கலவரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பையனைப் பின்னாலிருந்து பாதுகாக்க முயலும் போது ஒரு குண்டு அவரது கண்ணில் பாய்ந்தது. அங்கேயே மரணமடைந்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் 1971 -ல் பிறந்தார்கள். ஏர்ப்போட்டில் வேலை செய்தார்கள். M.T.A. மூலமாக அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிந்து கொண்டார்கள். பின்பு ஆராய்ந்த பிறகு 2008-ல் பைஅத் செய்தார். மனைவி அஹ்மதி இல்லை.

இருந்தாலும் அஹ்மதிய்யத் உண்மையானதுதான் என்பதில் உறுதியுள்ளவர் ஆவார். அல்லாஹ் அவர்களுக்கும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பை தந்தருள்வானாக. இவருடைய பையன் மற்றும் பெண்ணைத் தவிர சகோதரர்கள் மற்றும் பலர் ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள்.

நல்லியல்பு கொண்ட கட்டுப்படக்கூடிய, கிலாஃபத்துடன் அதிக அன்பு செலுத்தக்கூடிய நபராகத் திகழ்ந்தார். இதே பண்பில்தான் இவர்களுடைய குழந்தைகளும் உள்ளனர். அல்லாஹ் இவர்களுக்கு மன உறுதியை வழங்குவானாக.

**நான்காவது ஜனாஸா:** லுத்ப் ரஹ்மான் சாஹிப். நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு 27 ஏப்ரலில் மரணமடைந்தார். ஏறக்குறைய 80 வயதாகும். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய தனிச்செயலரின் மூத்த மகன் ஆவார். மாறாக, தஹ்ரீகே ஜதீதுடைய ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராவார். வாழ்க்கையை அர்ப்பணித்தவராவார். ஃபஸ்ல் உமர் மருத்துவமனையில் டாக்டர் மிர்ஸா முனவர் அஹ்மத் சாஹிபுடன் வேலை செய்து வந்தார். இவருக்கு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. கிலாஃபத்துடன் நல்ல தொடர்பு கொண்டவராகத் திகழ்ந்தார்கள். ரப்ஆ மக்களுக்கு சேவை செய்யக்கூடியவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி), ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி), ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆகியோருக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி), ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி), ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) போன்றோருக்கு உபயோகப்படுத்தப்படும் ஊசியை பரக்கத் என்று பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். மேலும் தற்போது ரப்வாவில் அல்லாஹ்வின் அருளால் ஃபஸ்லே உமர் மருத்துவமனை, Heart Institute போன்ற மருத்துவமனையில் பல வசதிகள் உள்ளன. ஆனால், அந்தக் காலத்தில் டாக்டர் மிர்ஸா முனவர் அஹ்மத் சாஹிப் மற்றும் டாக்டர் முஹம்மது அஹ்மத் சாஹிப் இருந்தார்கள். மேலும் அப்போது நூலகத்தை லுத்ஃப் ரஹ்மான் சாஹிப் தான் நடத்தினார்கள். இதனைத் தவிர தேவைப்படும் போதெல்லாம் மக்களை வீட்டிற்கு அழைத்து வருவார்கள். இருந்த வசதியைக் கொண்டு அவர்கள் புன்முறுவலுடன் சேவை செய்து வந்தார்கள். இவர் ஆரம்பகால ஃபஸ்ல் உமர் மருத்துவமனையின் பணியாளர் ஆவார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவருடைய மனைவி காஸி முஹம்மது ரஷீத் சாஹிப் உடைய மகள் ஆவார். மர்ஹூம் மூஸி ஆவார். இவர் தற்போது ஜெர்மனியில் தான் இருந்து வந்தார். இவருடைய பிள்ளைகளும் ஜெர்மனியில் தான் இருக்கின்றனர். இவரை அடக்கம் செய்ய ரப்வா கொண்டு செல்லப்படுவார்கள். இவர்கள் அனைவருடைய ஜனாஸாவையும் நான் தொழ வைப்பேன்.

அல்லாஹ் இவர்கள் அனைவருடைய தகுதிகளையும் உயர்த்துவானாக! வரக்கூடிய சந்ததியையும் அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்துடன் விசுவாசமுள்ளவர்களாக ஆக்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★


JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 29.04.2011

Translated by : Maulvi ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456